## 2019ஆம் வருடம் மார்ச் மாதம் 06.03.2019ம் நாள் புதன்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை : திருமதி. ரா.மகேஸ்வரி பி.காம்.,**
**ஆணையாளர், தருமபுரி நகராட்சி**

**பொருள் எண் : 1**

அரசு ஆணை 73 மற்றும் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றிக்கை ந.க.எண்.20555/2018/ஆர் நாள் 30.07.2018ல், 01.04.2018 முதல் நகராட்சிகளில் சொத்துவரி சீராய்வு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே தருமபுரி நகராட்சியில் 33 வார்டுகளில் சொத்து வரி சீராய்வு திருத்தம் நோட்டீஸ் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டதினை கேட்பு நோட்டிஸ் (Special Notice 2 Set & Working Sheet 1 Set) பிரிண்டவுட் எடுக்க வேண்டியிருப்பதால் மேற்கண்ட பணிக்காக 27.02.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் (ஒரு பக்கம் பிரிண்டவுட் விலை) |
|---|---|---|
| 1 | திருமதி. கே.முழுமதி | Rs.2.00 |
| 2 | ஸ்ரீ சக்தி கன்ஷக்சன் | Rs.2.50 |
| 3 | திரு. டி.எஸ்.ஜப்பார் | Rs.3.00 |

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட வரிசை எண் 1ல் கண்ட திருமதி. கே.முழுமதி அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 2**

நகர்புற ஏழைகள், விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழை தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு சிறப்பு நிதி உதவியாக ரூ.2000/– வழங்க அரசு ஆணை(நிலை) எண் 20 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மஅதி3) துறை நாள் 13.02.2019ல் வழிகாட்டு நெறிமுறைகள் ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி நகர்புற பகுதியில் உள்ள ஏழை தொழிலாளர் குடும்பங்களை கண்டறிந்து கணக்கெடுப்பு பணி மேற்கொண்டு புள்ளி விவரங்களை இணையதளம் வழியாக கணினியில் பதிவேற்றம் செய்ய அரசு கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் 22.02.2019ம் தேதிய கானொளி காட்சியில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி இப்பணி மேற்கொள்ள தேவையான படிவங்கள் அச்சடிக்கவும், கணக்கெடுப்பாளர்களுக்கும் மற்றும் கணினியில் பதிவு செய்தவர்களுக்கு வழங்க வேண்டிய தோராய செலவினம் ரூ.275000/– ஆகும். எனவே இப்பணி தமிழக அரசின் முதன்மையான கொள்கை அறிவிப்பு திட்டம் என்பதால், உரிய காலத்திற்குள் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டது. அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்படி நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் திருமதி.எம்.முழுமதி மூலம் மேற்கொள்ளப் பட்டதையும், செலவினம் செய்யப்பட்டதையும் மன்றம் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 3**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிடம் கட்ட அனுமதி கோரி பெறப்படும் கட்டிட விண்ணப்பங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சி கட்டிட விதிகளின் படி பரிசீலனை செய்யப்பட்டும் நகர்மன்ற தீர்மான எண். 61 நாள் 28.02.2017 அனுமதிக்கப்பட்ட உரிமையாணை கட்டண விதிகளின் படி கட்டணங்கள் வசூலிக்கப்பட்டும் அனுமதிக் காலம் மூன்றாண்டுகளுக்கு மட்டும் வழங்கப்பட்டும் வருகிறது. தற்போது தமிழக அரச அரசாணை (நிலை) எண்18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை (எம்.ஏ1) நாள் 04.05.2019ன் படி இறுதி செய்யப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி 3, பிரிவு 1(a) நாள் 04.02.2019ல் பிரகடணப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றம் கட்டிட விதிகள் 2019ன் படி உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்படும் நடைமுறைகளை கடைபிடிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 05.03.2019ம் தேதிய சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.31159/2019 டிபி3ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றம் கட்டிட விதிகள் 2019ம் மற்றும் அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வடிகால் துறை (எம்.ஏ1) நாள் 04.02.2019ம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 4**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிடம் கட்ட அனுமதி கோரி வரும் கட்டிட விண்ணப்பங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சி கட்டிட விதிகளின் படி பரிசீலனை செய்யப்பட்டும், நகர்மன்ற தீர்மான எண் 61 நாள் 28.02.2017ல் அனுமதிக்கப்பட்ட உரிமையாணை கட்டண விதிகளின் படி கட்டணங்கள் வசூலிக்கப்பட்டும் அனுமதி காலம் மூன்றாண்டுகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தமிழக அரசால் அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை (எம்.ஏ1) நாள் 04.02.2019ன் படி இறுதி செய்யப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி 3, பிரிவு1(a) நாள் 04.02.2019ல் பிரகடணப் படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றம் கட்டிட விதிகள் 2019ன் படி உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்படும் நடைமுறைகளை கடைபிடிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 05.03.2019ம் தேதிய சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.31159/2019/டிபி3ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இனிவருங்காலங்களில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி 14ன் படி திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒரு முறை கால நீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், அனுமதிக் காலத்தினை 5 ஆண்டுகளுக்கு வழங்கவும், ஒரு முறை கால நீடிப்பு காலத்தினை 3 ஆண்டுகளுக்கு வழங்கவும் புதிய கால அவகாசத்திற்கேற்ப உரிமையானை கட்டணங்கள் கீழ்கண்டுள்ளவாறு திருத்திய கட்டண விகிதங்களின் படி வரும் 01.04.2019 முதல் வசூலிக்கவும், மேற்படி திருத்தியமைக்கப்பட்ட உரிமையாணை கட்டண விபரத்தினை மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கு ஏற்படும் செலவினத்தை, நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஓட்டுவில்லை, தகரம், ஆஸ்பெஸ்டாஸ், தார்சு கூரை குடியிருப்பு கட்டடம் கட்ட | ஒரு சதுர மீட்டருக்கு | 5 ஆண்டு | ரூ.50 |
| 2. | தகரம், ஓட்டுவில்லை, ஆஸ்பெஸ்டாஸ், தார்சு கட்டடம் அனைத்து வியாபாரம் மற்றும் தொழிற்சாலை கட்டடங்களுக்கு | ஒரு சதுர மீட்டருக்கு | 5 ஆண்டு | ரூ.100 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | மலகழிவுறை (செப்டிக் டேங்க்) கட்ட | 1க்கு | 5 ஆண்டு | ரூ.500 |
| 4 | சுற்றுச்சுவர் 1.5 மீஉயரம் 1 மீ நீளம் கட்ட | – | 5 ஆண்டு | ரூ.30 |
| 5 | குளியல் அறை கட்டுமானம் | 1க்கு | 5 ஆண்டு | ரூ.200 |
| 6. | கழிப்பறை கட்டுமானம் | 1க்கு | 5 ஆண்டு | ரூ.200 |
| 7. | குடிநீர் தொட்டி கட்டுமானம் | 1க்கு | 5 ஆண்டு | ரூ.500 |
| 8. | தரைபட அங்கீகார கட்டணம் | 1க்கு | 5 ஆண்டு | ரூ.300 |
| 9. | தண்ட கட்டணம் | 1க்கு | 5 ஆண்டு | ரூ.2500 |
| 10. | கட்டிட விண்ணப்பம் சரிபார்த்தல் கட்டணம் | 1க்கு | 5 ஆண்டு | ரூ.500 |
| 11 | வரைபட நகல் கட்டணம் | 1க்கு | 5 ஆண்டு | ரூ.300 |

**அலுவலக குறிப்பு**

திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதிக் காலம் 5 ஆண்டுகளாக மாற்றியமைக் கப்பட்டுள்ளதால் **01.04.2019** முதல் திருத்தியமைக்கப்பட்ட புதிய உரிமையானை கட்டணங்களின் படி கட்டணங்கள் வசூலிக்கும் பொருட்டு திருத்தியமைக்கப்பட்ட புதிய உரிமையாணை கட்டணங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

புதியதாக திருத்தியமைக்கப்பட்ட உரிமையாணை கட்டண விபரங்களை மாவட்ட அரசிதழ் பிரசரம் செய்வதற்கான செலவினத்தை செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 5**

**31.12.2018** அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலகத்தில் மாண்புமிகு உயர் கல்வி துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் குடிநீர் தொடர்பான ஆய்வு கூட்டத்தில் எதிர் வரும் கோடைக் காலத்தில் பொது மக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்குவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

மேலும் தருமபுரி நகராட்சியில் 33 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு குடிநீரினை பஞ்சப்பள்ளி சின்னாறு அணையில் இருந்து எடுத்து தட்டுப்பாடுயின்றி வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் எதிர்வரும் கோடைக் காலத்தில் குடிநீரிணை தட்டுபாடு இன்றி வழங்க பஞ்சப்பள்ளி சின்னாறு அணையில் மேலும் ஒரு கிணற்றினை அமைத்து குடிநீரினை தட்டுபாடின்றி வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

பஞ்சப்பள்ளி சின்னாறு அணையில் ரூ24லட்சம் மதிப்பீட்டில் 3.5விட்டமுள்ள நீர் ஊற்று கிணறு மற்றும் கிடைமட்ட தொட்டி அமைக்கும் பணிக்கு நகர் மன்ற தீர்மான எண்638 நாள்11.01.2019ல் அனுமதி வழங்கப்பட்டு, 07.02.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1).திரு.டி.எஸ்.ஜப்பார் -0.03 %குறைவு

2).திரு.டி.எஸ்.எக்பால் **-0.06%**அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

வரிசை 1ல் கண்ட திரு.டி.எஸ்.ஜப்பார் ஒப்பந்ததாரர் அவர்களின் 0.03% குறைந்த ஒப்பந்தப்புள்ளினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 6**

**31.12.2018** அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலகத்தில் மாண்புமிக உயர் கல்வி துறை அமைச்சர் மற்றும் மவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் குடிநீர் தொடர்பான ஆய்வு கூட்டத்தில் எதிர் வரும் கோடைக் காலத்தில் பொது மக்களுக்கு தட்டுப்பாடுயின்றி குடிநிர் வழங்குவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

மேலும் தருமபுரி நகராட்சியில் **33** வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு குடிநீரினை பஞ்சப்பள்ளி சின்னாறு அணையில் இருந்து எடுத்து தட்டுப்பாடுயின்றி வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் எதிர்வரும் கோடைக் காலத்தில் குடிநீரிணை தட்டுபாடு இன்றி வழங்க பஞ்சப்பள்ளி சின்னாறு அணையில் மேலும் ஒரு கிணற்றினை அமைத்து குடிநீரினை தட்டுபாடின்றி வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

பஞ்சப்பள்ளி சின்னாறு அணையில் ரூ**22**லட்சம் மதிப்பீட்டில் பைப் லையின் மற்றும் கிடைமட்ட தொட்டி அமைக்கும் பணிக்கு நகர் மன்ற தீர்மான எண்**639** நாள்**11.01.2019**ல் அனுமதி வழங்கப்பட்டு, **07.02.2019** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1).திரு.டி.எஸ்.ஜப்பார் -0.04 %குறைவு

2).திரு.டி.எஸ்.எக்பால் **-0.08%**அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

வரிசை 1ல் கண்ட திரு.டி.எஸ்.ஜப்பார் ஒப்பந்ததாரர் அவர்களின் 0.04% குறைந்த ஒப்பந்தப்புள்ளினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 7**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தருமபுரி அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.1588/2018/ஆர்4 நாள்01.02.2019ல் தருமபுரி நகராட்சி வார்டு எண் 20, அக்காரத் தெரு பெருமாள் கோயில் அருகில் ஆழ்துளை கிணறு மற்றும் மினிடேங்க் அமைக்கும் பணிக்கு ரூ2.00லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில், இப்பணிக்கு 28.02.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கு வைக்கப்படுகிறது

1).திரு.ஜெ.முருகன் -0.01 %குறைவு

2).திருமதி.கே.முழுமதி **-0.05%**அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

வரிசை 1ல் கண்ட திரு.ஜெ.முருகன் ஒப்பந்ததாரர் அவர்களின் 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 8**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தருமபுரி அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.1588/2018/ஆர்4 நாள்01.02.2019ல் தருமபுரி நகராட்சி வார்டு எண் 20, அக்காரத் தெரு பெருமாள் கோயில் அருகில் ஆழ்துளை கிணறு மற்றும் மினிடேங்க் அமைக்கும் பணிக்கு ரூ2.00லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில், இப்பணிக்கு 28.02.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கு வைக்கப்படுகிறது

1).திரு.ஜெ.முருகன் -0.01 %குறைவு
2).திருமதி.கே.முழுமதி **-0.05%**அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

வரிசை 1ல் கண்ட திரு.ஜெ.முருகன் ஒப்பந்ததாரர் அவர்களின் 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 9**

அப்பாவு நகர் 4வது தெருவில் ஆழ்துளை கிணறு மற்றும் மினிடேங்க் அமைக்கும் பணிக்கு ரூ2.00லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில், இப்பணிக்கு 28.02.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கு வைக்கப்படுகிறது

1).திரு.ஜெ.முருகன் -0.13 %குறைவு
2).திருமதி.கே.முழுமதி **-0.63%**அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

வரிசை 1ல் கண்ட திரு.ஜெ.முருகன் ஒப்பந்ததாரர் அவர்களின் 0.13% குறைந்த ஒப்பந்தப்புள்ளினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 10**

தருமபுரி நகராட்சிக்கு கணினி பயன்பாட்டிற்கு 6.5 KV UPS வாங்கி 13 ஆண்டுகள் ஆகிவிட்டதால் தற்போது மின் இணைப்பு துண்டிக்கப்படும் போது அடிக்கடி பழுதாகி விடுகிறது. இதனால் வசூல் பணிகள் மற்றும் அன்றாட அலவலக பணிகள் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே புதிய 6.5 KV UPS 1 எண்ணிக்கை புதியதாக வாங்க 05.03.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1). SRI RAM ELECTRONICS DHARMAPURI -98,940.00
2).SAAMY AGENCIES DHARMAPURI -99,900.00
3).ARUN ELECTRICALS DHARMAPURI -99,610.00

**அலுவலகக்குறிப்பு:**

வரிசை எண் 1ல் கண்ட SRI RAM ELECTRONICS DHARMAPURI நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

**பொருள் எண் : 11**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 1 கிருஷ்ணகிரி மெயின் ரோட்டில் சென்டர் மீடியா தெருவிளக்கு கம்பம் மீது லாரி மோதி ரோட்டின் நடுவில் சாய்ந்து உள்ளதால் இவற்றினை உடனடியாக சரி செய்ய வேண்டியிருப்பதால், இப்பணியினை அசவர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் எம்/எஸ்.குவாலிட்டி இஞ்ஜினியரிங் மூலம் ரூ1.00லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 12**

நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் சென்னை அவர்களின் அலுவலக தொலைபேசி செய்தியில் அனைத்து நகராட்சிகளிலும் Bio-Matric முறையில் உள் மற்றும் வெளிபுற பணியாளர்களின் அலுவலக வருகை நேரம் குறித்து பதிவு செய்ய Bio-Matric இயந்திரத்தினை வாங்கி பொறுத்துமாறு தெரிவிக்கப்பட்டதின் பெயரில் தருமபுரி நகராட்சிக்கு பொது பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவுக்கு 6 எண்ணிக்கை Bio-Matric இயந்திரத்தினை புதியதாக வாங்க 01.03.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1). M/S GOLD SOFT COMPUTERS KOMARAPALAYAM(1NoS) -72,750.00
2).M/S.PERENNIAL SYATEMS SALEM -73,600.00

**அலுவலகக்குறிப்பு:**

வரிசை எண் 1ல் கண்ட M/S GOLD SOFT COMPUTERS நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

**பொருள் எண் : 13**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 31 பராதிபுரம் EB காலனியில் சுமார் 120 வீடுகளில் வசிக்கும் 750 நபர்களுக்கு எங்கள் பகுதியில் அமைந்துள்ள பெரிய அளவிலான பொது கிணறு, இலக்கியம்பட்டி ஊராட்சியின் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி ஆகியவைகளிலிருந்து பொது மக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டுவந்தது. தற்போது நிலவிவரும் கடும் வறட்சியின் காரணமாக மேற்படி இரு வழிகளிலும் நீர் வற்றிப் போய்விட்டதால் பொது மக்கள் குடிநீர் விலைகொடுத்து வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகின்றார்கள். தற்போது கோடைக்காலம் என்பதால் குடிநீருக்கு தட்டுபாடு ஏற்பட்டு பொது மக்கள் நீண்ட துாரம் சென்று குடிநீர் கொண்டுவந்து பயன்படுத்துகின்றார்கள். எனவே மேற்கண்ட இடத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் வசதி செய்து தருமாறு கோரியுள்ளார்கள். எனவே மேற்கண்ட பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரார் திரு.சி.குட்டிமணி அவர்கள் மூலம் ரூ8.00லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 14**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 31 பராதிபுரம் EB 3வது கிராஸ் தெருவில் உள்ள ரோட்டில் கைபம்பு இடையூராக உள்ளது. மேற்கண்ட கைபம்பினை மாற்றி புதியதாக மின் விசை பம்பாக மாற்றி தருமாறு கோரியுள்ளார்கள். மேற்கண்ட பணியினை செய்தால் அப்பகுதிகளில் உள்ள பொது மக்களின் குடிநீர் தட்டுப்பாட்டினை போக்க முடியும். தற்போது கோடைகாலம் என்பதால் கடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் வண்ணம் உள்ளது. எனவே இப்பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரார் திரு.சி.குட்டிமணி அவர்கள் மூலம் ரூ1.50லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 15**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 33 அன்னசாகரம் ஏரிகோடி பகுதி பொது மக்கள் 150 குடுப்பங்களுக்கு மேல் இப்பகுதியில் வசித்து வருகின்றோம் இப்பகுதி பொது மக்களுக்கு இது நாள் வரை குடிநீர் வசதிகள் ஏதும் செய்து தரப்படவில்லை எனவும் இப்பகுதி பொது மக்கள் குடிநீர் எடுக்க இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்று குடிநீர் எடுத்து வரும் நிலையில் உள்ளது எனவும் தற்போது கோடைகாலம் என்பதால் குடிநீருக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே குடிநீர் வசதிகள் செய்து தருமாறு மாண்புமிகு உயர் கல்வி துறை அமைச்சர் அவர்களின் முகாமில் கோரிக்கை மனுவாக அளிக்கப்பட்டது இம்மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டதின் பெயரில் மேற்கண்ட பகுதிக்கு குடிநீர் வழங்க மதுராபாய் திருமண மண்டபம் சாலையில் இருந்து ஏரிக்கோடி வரை பகிர்மான குழாய் அமைக்கும் பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.கே.முழுமதி மூலம் ரூ10.50லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 16**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 30 அம்பேத்கார் காலனியில் சுமர் 40 குடுப்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றோம், எங்கள் பகுதியில் உள்ள பொது மக்கள் குடிநீருக்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே அம்பேத்கார் காலனி பொது மக்களுக்கு பயன்படும் வகையில் குடிநீர் வசதிகள் செய்து தருமாறு மாண்புமிகு உயர் கல்வி துறை அமைச்சர் அவர்களின் முகாமில் கோரிக்கை மனுவாக அளிக்கப்பட்டது. இம்மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துறை செய்யப்பட்டதின் பெயரில் மேற்கண்ட பகுதியல் சிறு மின்விசை பம்பு அமைத்து பொது மக்களுக்கு குடிநீர் வழங் வேண்டியிருப்பதால் இப்பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.கே.முழுமதி மூலம் ரூ3.00லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 17**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 1 முதல் 33வரை உள்ள பொது கழிப்பிடங்கல் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அவற்றினை பழுது பார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவர 33 வார்டு பொது மக்கள் கோரியுள்ளார்கள். எனவே வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள பொது கழிப்பிடங்களை பழுது பார்க்கும் பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்கள் மூலம் ரூ9.50ட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 18**

தருமபுரி நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்கள் நிறுத்துவதற்கு உரிய இடம் இல்லாததால் நகராட்சி பள்ளிகளில் மற்றும் மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் நிறுத்தி வைக்கப்படுகின்றது. எனவே வார்டு எண் 30 அம்பேத்கார் காலனி மேல் நிலை நீர் தேக்க தொட்டி பகுதியில் காலியாக உள்ள இடத்தில் வாகனங்கள் நிறுத்த SHED அமைக்க வேண்டியிருப்பதால் இப்பபணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்கள் மூலம் ரூ24.90ட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 19**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 30 அம்பேத்கார் காலனி பொது மக்கள் மழை நீர் கால்வாயின் உயரம் குறைவாக உள்ளதால் மழைக் காலங்களில் மழை நீர் வீட்டிற்குள் புகுந்துவிடுவதால் மிகவும் சிரமமாக உள்ளது. மேற்கண்ட பகுதியில் உள்ள மழை நீர் கால்வாயின் உயரத்தினை உயர்த்தி தருமாறு மாண்பு மிகு உயர் கல்வி துறை அமைச்சர் அவர்களின் முகாமின் போது அளிக்கப்பட்ட மனுவின் மீது உரிய நடவடிக்கையினை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டதின் பெயரில், மேற்கண்ட மனுவில் தெரிவிக்கப்பட்ட இடத்தில் மழை நீர் கால்வாயின் உயரத்தினை உயர்த்தும் பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எம்.அழகேசன் அவர்கள் மூலம் ரூ7.00ட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 20**

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் உள்ள சிறு மின்விசை பம்புகள் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் தட்டுபாடு ஏற்படுவதாக பொது மக்களிடமிருந்து புகர்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே பழுதடைந்துள்ள சிறு மின் விசைபம்புகள் சரி செய்தால் குடிநீர் தட்டுபாடு இன்றி பொதுமக்களுக்கு வினியோகம் செய்ய இயலும். எனவே கீழ்கண்ட இடங்களில் பழதடைந்துள்ள சிறு மின்விசை பம்புகள் சரி செய்யும் பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு டி.எஸ்.ஜபார் அவர்கள் மூலம் பணியினை ரூ8.50 லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

1).சாலை வினாயகர் ரோடு. 2).கிராம அலுவலர் அலுவலகம்.3).அன்னசாகரம்.4).அன்னசாகரம் தொப்பு தெரு. 5).நகரபேருந்து நிலையம்.6).மதிகோண்பாளையம் நகராட்சி பள்ளி.7).பாரதிபுரம் குமரபுரி காலனி.8).ஏஎஸ்பி அலுவலகம்.9).தடங்கம் உரக்கிடங்கு.10).நெடுமாறன் நகர். 11). எரங்காட்டுகொட்டாய்.12). சந்திரம் மேல்தெரு. 13).குமாரசாமிபேட்டை ரோடு.14).வேடியப்பன் திட்டு. 15). காந்தி நகர். 16).கொல்லஅள்ளி ரோடு

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்

**பொருள் எண் : 21**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 32 அன்னசாகரத்தில் உள்ள நீரேற்று நிலையம் பழுதாகி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் பொதுமக்களிடமிருந்து மேற்கண்ட நீரேற்று நிலையித்தினை சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு புகார்கள் வந்த வண்ணம் உள்ளதாலும், இந்த நீரேற்று நிலையித்தினை சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்தால் அன்னசாகரத்தில் குடிநீர் தட்டுப்பாட்டை தீர்க்க முடியும். எனவே பொது மக்களின் வேண்டுகோளினை ஏற்று இப்பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு டி.எஸ்.ஜபார் அவர்கள் மூலம் பணியினை ரூ6.00லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்க தொகை வழகியதை மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்

**பொருள் எண் : 22**

தருமபுரி நகராட்சியில் வார்டு எண் 30 அம்பேத்கார் காலனி மேல் நிலை நீர் தேக்க தொட்டிக்கு அமைக்கப்பட்ட சுற்று சுவர் பழுதடைந்து கீழே விழும் நிலையில் உள்ளதால் அவற்றினை அகற்றி விட்டு புதியதாக 0.90மீட்டருக்கு சுற்று சுவர் அமைக்கும் பணியினை அசவர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்கள் மூலம் ரூ2.00லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 23**

தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் தருமபுரி அவர்கள், தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் ஆய்வுகள் மேற்கொண்டபோது 33 வார்டுகளில் உள்ள கைபம்புகள் பழுதடைந்துள்ள மற்றும் உயரம் குறைவாக உள்ள கைபம்புகளில் கழிவு நீர் புகுவதாலும் அவற்றின் உயரத்தினை உயர்த்தி தருமாறும் பழுதடைந்துள்ள கைபம்புகளை உடனடியாக சரிசெய்து பொது மக்களின் குடிநீர் தட்டுபட்டினை உடனடியாக தீர்க்குமாறு நேரில் அறிவுறுத்தப்பட்டதின் பெயரில் கீழ்கண்ட கைபம்புகளை சரி செய்யும் பணி கைபம்புகளின் உயரத்தினை உயர்த்தும் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு டி.எஸ்.ஜபார் அவர்கள் மூலம் பணியினை ரூ0.50 லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

1).வார்டு எண் 17செங்ககொடிபுரம். 2)வார்டு எண் 1 அன்னைகாரன்தெரு. 3).வார்டு எண்3 காமச்சியம்மன் தெரு அன்னசாகரம்.4).வார்டு எண்33 அன்னசாகரம். 5).வார்டு எண்30 ஜி.எம் திரையரங்கம். 6).வார்டு எண்31 அமுதம் காலனி.7).அமுதம் காலனி முதல் தெரு.8)வார்டு எண்13 அண்ணா நகர் முதல் தெரு.9).வார்டு எண் 13 எம்.ஜி.ஆர் நகர்.10).அருணகிரி தெரு.11).வார்டு எண்13 எம்.ஜி.ஆர் தெரு.12). வார்டு எண் 1 மதிகோண்பாளையம்.13).வார்டு எண்3 இ.பி.காலனி.14).வார்டு எண் 31 பாரதிபுரம்.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 24**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 1 மதிகோண்பாளையம்,கிருஷ்ணகிரி ரோடு, வார்டு எண் 2 மதிகோண்பளையம் பொது கழிப்பிடம், பீன் தெரு பொது கழிப்பிடம், வார்டு எண் 3 பஜனைகோயில் தெரு, வார்டு எண் 7 ராமசாமி நாயுடு தெரு, வார்டு எண் 9 வட்டார வளர்ச்சி காலனி, வார்டு எண் 13 எம்.ஜி.ஆர் நகர், எம்.ஜி.ஆர் இரண்டாவது தெரு, வார்டு எண் 3 விருந்தாடியம்மன் கோயில் தெரு, வார்டு எண் 17 நெசவாளர் காலனி பகுதிகளில் சிறுமின் விசைபம்புகள் பழுதாகி உள்ளதால் பொது மக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்ய மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் உள்ள சிறு மின்விசை பம்புகளை சரி செய்யும் பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.கே.எம்.பிரகாஷ் அவர்கள் மூலம் ரூ1.50லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 25**

தருமபுரி நகராட்சி வார்டு எண்10 பென்னாகரம் ரோட்டில் பகுதி–2 திட்டத்தின் கீழ் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பினை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இந்த குடியிருப்பின் பின்புறத்தில் நுழைவாயில் அமைக்கப்படததால் அவ்வழியாக சமுகவிரோதிகள் நுழைவதால் துப்புரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருப்பதால் துப்புரவு பணியாளர்கள் நுழைவாயிலினை அமைத்து இருப்பு கதவினை அமைத்து தருமாறு கோரியதின் பெயரில் இப்பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் எம்/எஸ்.கார்த்திகேயன் கன்ஷக்சன் தருமபுரி அவர்கள் மூலம் ரூ1.00லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 26**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 23 சி.கே.சீனிவாச ராவ் தெருவில் உள்ள நகராட்சி பொறியாளர் பழைய குடியிருப்பு பழுதடைந்துள்ளதால் அவற்றினை இடுத்திவிட்டு புதிய பொறியாளர் குடியிருப்பினை அமைக்க மதிப்பீடுகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் சென்னை அவர்களின் அனுமதிக்கு மதிப்பீட்டினை தயார் செய்து அனுப்பும் பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் எம்/எஸ்.கார்த்திகேயன் கன்ஷக்சன் தருமபுரி அவர்கள் மூலம் ரூ0.50லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 27**

அரசு ஆணை 73 மற்றும் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றிக்கை ந.க.எண்.20555/2018/ஆர் நாள் 30.07.2018ல், 01.04.2018 முதல் நகராட்சிகளில் சொத்துவரி சீராய்வு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே தருமபுரி நகராட்சியில் 33 வார்டுகளில் சொத்து வரி சீராய்வு திருத்தம் நோட்டீஸ் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டதினை கேட்பு நோட்டிஸ் (Special Notice 2 Set & Working Sheet 1 Set) பிரிண்டவுட் எடுக்க வேண்டியிருப்பதால் மேற்கண்ட பணிக்காக 27.02.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் (ஒரு பக்கம் பிரிண்டவுட் விலை) |
|---|---|---|
| 1 | திருமதி. கே.முழுமதி | Rs.2.00 |
| 2 | ஸ்ரீ சக்தி கன்ஷக்சன் | Rs.2.50 |
| 3 | திரு. டி.எஸ்.ஜப்பார் | Rs.3.00 |

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட வரிசை எண் 1ல் கண்ட திருமதி. கே.முழுமதி அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 28**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தருமபுரி அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.2514/2018/ஆர்4 நாள்01.02.2019ல் தருமபுரி நகராட்சி வார்டு எண் 33, அன்னசாகரம் கொடிகொட்டாய்,வீடு அருகில் இரண்டு புதிய மின்கப்பங்கள் அமைத்து மீட்டருடன் தெருவிளக்கு பொறுத்துதல் பணிக்கு ரூ0.350லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில், இப்பணிக்கு 28.02.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கு வைக்கப்படுகிறது

1).திரு.ஜெ.முருகன் -0.13 %குறைவு
2).திருமதி.கே.முழுமதி -0.20%அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

வரிசை 1ல் கண்ட திரு.ஜெ.முருகன் ஒப்பந்ததாரர் அவர்களின் 0.13% குறைந்த ஒப்பந்தப்புள்ளினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண் : 29**

இயக்குநர் சேலம் அவர்களின் அலுவலக கட்டிடம் பராமரிப்பு பணிகள் செய்ய தருமபுரி நகராட்சியின் பங்கு தொகை ரூ1.00 லட்சத்தினை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சியின் பங்கு தொகை ரூ1.00 லட்சத்தினை செலத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண் : 30**

இந்நநகராட்சியில் குடிநீர் விநியோக திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணிக்காக தமிழ் நாடு நகர்புற வளர்ச்சி கழகம் சென்னை அவர்களின் கடித ந.க.எண். TUFIDCO/URF1819-33ULBs/AM(M)/2018 நாள்.15.10.2018 கடிதத்தின் படி கீழ் கண்டவாறு தீர்மானிக்கப்படுகிறது.

**<u>தீர்மானங்கள்</u>**

1). Resolved that Dharmapuri Municipality is authorizing the Commissioner Dharmapuri Municipality as the authorized signatory to borrow the interest free loan Rs.193.76lakh from TUFIECO for Provision of Internal 'Plumbing for HSC (Minimum 6500Nos) for making optimum utilization of Water supply at Dharmapuri Municipality' under Revolving of UIDSSMT as per the terms and conditions Prescribed by TUFIDCO.

2). The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Dharmapuri Municipality on the documents to be executed with TUFUDCO on behalf of Dharmapuri Municipality

3). Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement.

4).Resolved to adhere to time line as envisaged DPR

5).Resolved that Dharmapuri Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Dharmapuri Municipality's annual budget for the repayment of Principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creating sustainable revolving fund.

6). Resolved that Dharmapuri Municipality is authorizing the authorized Signatory to open and operate an ESCROW account for UGSS in favour of TUFIDCO till the repayment of Loan.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண் : 31**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29BF1096 மினி ஆட்டோக்கு பழுதுகள் சரி செய்யும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.22,000/-க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மேலும் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதில் 25.02.2019ம் தேதியில் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் கீழ்வருமாறு.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | V.R.S. ஆட்டோ கேரேஜ் | Rs.21,250/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.20,800/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.19,700/- |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு ஆகும் செலவினம் ரூ.19,700/-க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீவாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 32**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29BF1076 மினி ஆட்டோக்கு பழுதுகள் சரி செய்யும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.27,000/-க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மேலும் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதில் 25.02.2019ம் தேதியில் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் கீழ்வருமாறு.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | V.R.S. ஆட்டோ கேரேஜ் | Rs.25,100/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.26,000/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.23,650/- |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு ஆகும் செலவினம் ரூ.23,650/-க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீவாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 33**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29BF1103 மினி ஆட்டோக்கு பழுதுகள் சரி செய்யும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.25,000/-க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மேலும் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதில் 25.02.2019ம் தேதியில் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் கீழ்வருமாறு.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | V.R.S. ஆட்டோ கேரேஜ் | Rs.25,100/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.26,000/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.23,650/- |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு ஆகும் செலவினம் ரூ.23,650/-க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீவாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 34**

2019ம் வருட நாடாளுமன்ற தேர்தல் 18.04.2019 அன்று நடைபெற உள்ளது. இத்தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க ஏதவாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வட்டாட்சியர்(தேர்தல்), தருமபுரி அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். வாக்களிப்பது தொடர்பான விளம்பர பேனர்கள் செய்து கொள்ளவும், தேர்தல் தொடர்பான மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்களால் தெரிவிக்கும் பணிகள் உடன் முடித்து கொடுக்கவும் ஆகும் தோராய செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 35**

இந்நகராட்சிக்கு சொந்தமான நகரப்பேருந்து நிலைய வளாக உட்புறம், அம்மா உணவகம் மற்றும் நகராட்சிப் பகுதியில் மாத வாடகை அடிப்படையில் தற்காலிக இரும்பு பொட்டி கடை வைத்துக்கொள்ள பொது மேலாளர், தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் லிமிடெட், கிருஷ்ணகிரி என்ற நிறுவனம் திருமதி.எஸ்.சுமதி என்பவருக்கு ஆவின்பாலகம் வைத்துக் கொள்ள அனுமதி வழங்க கேட்டுள்ளார். மேற்படி பேருந்து நிலையத்தின் உட்புறம் ஆவின்பாலகம் வைக்க அனுமதி வழங்க இயலாது என்பதால் பேருந்து நிலையத்தின் வெளிப்புறம் (முகாம்பிகை மெடிக்கல்ஸ்) முன்புறம் உள்ள காலி இடத்தில் ஆவின் பாலகம் வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 36**

இந்நகராட்சிக்கு பொதுசுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள் தினசரி குப்பைகளை அகற்ற தேவைப்படும் தளவாட பொருட்கள் இருப்பில் இல்லாததால் புதியதாக தளவாடபொருட்கள் வாங்கி கொள்ள உண்டான தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், பொதுசுகாதாரப்பிரிவு பணிகள் என்பதால் அவசரமாக பணிகள் மேற்கொள்ள வேண்டி 04.03.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1. | டி.எஸ்.ஜப்பார் | ரூ.4,99,972 |
| 2. | டி.எஸ்.எக்பால் | ரூ.5,49,887 |

**அலுவலகக்குறிப்பு:**

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையரின் முன் அனுமதியை பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்டுள்ள திரு.டி.எஸ்.ஜப்பார் என்பவர் விலைவிகிதம் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவவலரின் முன் அனுமதியை பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 37**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.44555/2013/பி3 நாள் 03.10.2018 கடிதத்தில் இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் டெங்கு காய்ச்சல் ஒழிப்பு, ஒரு முறை உபயோகித்து வீசியெறியும் பிளாஸ்டிக் பொருட்கள் ஒழிப்பு குறித்த நாடகம் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு விழிப்புணர்வு ஏற்படுத்த பாரதி கிராமியக் கலை வளர்ச்சி மையம், மோட்டூர் அவர்கள் மூலம் நகராட்சிக்கு உட்பட்ட நகர பேருந்து நிலையம், கடைவீதி, மதிகோன்பாளையம் மற்றும் அன்னசாகரம் பகுதிகளில் 29.12.2018 மற்றும் 31.12.2018 ஆகிய இரண்டு நாட்களுக்கு நடைபெற்றது. மேற்கண்ட விழிப்புணர்வு நாடகத்திற்கு ஏற்படும் செலவினத்தை தொகை ரூ.20,000/– மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 38**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் டிப்பர் லாரி TN29H8269 வாகனத்தின் தகுதி சான்று புதுபிக்க (FC) வாகனத்தின் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1,30,000/-க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மேலும் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதில் 25.02.2019ம் தேதியில் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் கீழ்வருமாறு.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | V.R.S. ஆட்டோ கேரேஜ் | Rs.1,26,500/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.1,29,700/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.1,21,050/- |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு ஆகும் செலவினம் ரூ.1,21,050/-க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீவாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 39**

2019 – 2020ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு தேவையான, படிவங்கள், பதிவேடுகள் மற்றும் எழுது பொருட்கள் ஆகியவையை மாவட்ட கூட்டுறவு அச்சக சேவை சங்கம் லிமிடெட் மூலம் வாங்கிக் கொள்ளவும் அச்சடித்துக் கொள்ளவும் தோராய செலவீனத்திற்காக ரூ.10.00 பத்து இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

இச்செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 40**

இந்நகராட்சியின் வருவாய் வரத்தக்க் இனங்களை பொது மக்கள் விரைந்து செலுத்த விளம்பரம் செய்ய கிழ் வரும் ஆட்டோ உரிமையாளரிடம் இருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

1. ரூ.2100
2. ரூ.2200
3. ரூ.2300

**அலுவலகக்குறிப்பு:**

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் வரிசை எண் 1 அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுக் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் : 41**

இந்நகராட்சியில் ஆணையாளர் அவர்களின் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் TN29AM7747 அதிக கிலோ மீட்டர் இயக்கப்பட்டதால் ஆயில் சார்வீஸ், கிளர்ச் லோடிஸ்பிளேட் 4வீல்களுக்கு கிரீஸ் மாற்றுதல் பிரேக்போடு மற்றுதல் மற்றும் இதர பழுதுகளை சரி செய்யப்பட வேண்டியிருப்பதால், மேற்கண்ட பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையான எஸ்.கே.எஸ். மகேந்திர, மகேந்திர கம்பெனி தருமபுரி நிறுவனத்தில் பணிகள் மேற்கொள்ள எற்படும் தோராய செலவினம் ரூ35000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 42**

தருமபுரி நகராட்சியில் பொறியாளர் பிரிவில் இயங்கும் பாதளா சாக்கடை வாகனத்திற்கு 2019–2020ம் ஆண்டுக்கு தகுதி சான்று வாங்க வேண்டியிருப்பதால் வாகனத்தில் ஏற்பட்டு பழுதுகளை சரி செய்ய 01.03.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீழ் கண்டவாறு மறத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீவாரி மோட்டர் ஓர்க்ஸ் தருமபுரி | 55700.00 |
| 2 | அஜ்மிர் ஆட்டோ கேரோஜ் தருமபுரி | 58300.00 |
| 3 | வீ.ஆர்.எஸ்.ஆட்டோ கேரோஜ் தருமபுரி | 60950.00 |

**அலுவலகக்குறிப்பு:**

வரிசை எண் 1ல் கண்ட ஸ்ரீவாரி மோட்டர் ஓர்க்ஸ் தருமபுரி அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

**பொருள் எண் : 43**

தருமபுரி நகராட்சியில் நகர் மன்ற தலைவர் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனத்திற்கு புதிய 4 எண்ணிக்கை டயர் வாங்க 05.03.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீழ் கண்டவாறு மறத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீவாரி மோட்டர் ஓர்க்ஸ் தருமபுரி | 34,900.00 |
| 2 | அஜ்மிர் ஆட்டோ கேரோஜ் தருமபுரி | 34,900.00 |
| 3 | வீ.ஆர்.எஸ்.ஆட்டோ கேரோஜ் தருமபுரி | 38,800.00 |

**அலுவலகக்குறிப்பு:**

வரிசை எண் 1ல் கண்ட ஸ்ரீவாரி மோட்டர் ஓர்க்ஸ் தருமபுரி அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

**பொருள் எண் : 44**

தருமபுரி நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் குடியிருப்புகளுக்கு தினசரி நாளிதழ்கள் வாங்கப்பட்டு வருகின்றது. அதற்கான மாத தொகை வழங்க வேண்டியிருப்பதால் அதற்காக ஏற்படும் தோராய செலவினம் ரூ.50000.00 மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 45**

இந்நகராட்சிக்கு பொதுசுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள் தினசரி குப்பைகளை அகற்ற தேவைப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி கொள்ள உண்டான தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், பொதுசுகாதாரப்பிரிவு பணிகள் என்பதால் அவசரமாக பணிகள் மேற்கொள்ள வேண்டி 04.03.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1. | டி.எஸ்.ஜப்பார் | ரூ.417750/– |
| 2. | டி.எஸ்.எக்பால் | ரூ.442500/– |

**அலுவலக குறிப்பு:**

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையரின் முன் அனுமதியை பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்டுள்ள திரு.டி.எஸ்.ஜப்பார் என்பவர் விலைவிகிதம் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தனி அலுவலர்**
**மற்றும் ஆணையாளர்**
தருமபுரி நகராட்சி.

**2019ஆம் வருடம் மார்ச் மாதம் 06.03.2019ம் நாள் புதன்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 | 1 | அனுமதிக்கப்பட்டது |
| பொருள் : 2 முதல் 3வரை | 2 முதல் 3 வரை | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 4 முதல் 12 வரை | 4 முதல் 12 வரை | அனுமதிக்கப்பட்டது |
| பொருள் : 13 முதல் 14 வரை | 13 முதல் 14 வரை | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 15 முதல் 27 வரை | 15 முதல் 27 வரை | அனுமதிக்கப்பட்டது |
| பொருள் : 28 | 28 | ஏற்கப்பட்டது |
| பொருள் : 29 முதல் 45 வரை | 29 முதல் 45 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்
தருமபுரி நகராட்சி.